## இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள

# காரைக்கால் மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை வேண்டும்!

### புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தல் !



புதுச்சேரி, ஏப்.14-

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள காரைக்கால் மீனவர்கள் 12 பேரை உடனடியாக விடுவிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் இரா. சிவா வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படை கைது செய்வதும், படகுகளை பறிமுதல் செய்வதையும் வாடிக்கையாக கொண்டுள்ளது. இதுகுறித்து புதுச்சேரி அரசு ஒன்றிய அரசுடன் பேசி இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இருப்பினும் ஒன்றிய அரசின் அலட்சியத்தால் மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்கதையாகி வருகிறது.

காரைக்கால் கிளிஞ்சல் மேடு, சுனாமி நகரைச் சேர்ந்த வீரவேல், திருப்பட்டினம் கீழையூர் பகுதியைச் சேர்ந்த பிரதீப், சாமந்தான் பேட்டை தமிழ்வாணன், கோட்டுச்சேரி சஞ்சய் உள்ளிட்ட 12 மீனவர்கள் விசைப்படகில் கடந்த 10ம் தேதி INDPYPKMM1338 பதிவு எண் கொண்ட விசைப்படகில் காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இதில் புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு மீனவர்களும், புதுச்சேரியை ஒட்டிய தமிழகப் பகுதியைச் சேர்ந்த ஐந்து பேரும் அடங்குவர்.

இந்நிலையில், 11-ஆம் தேதி நள்ளிரவு கோடியக்கரைக்கு தென்கிழக்கு பகுதியில் நடுக்கடலில் மீன்பிடித் துக் கொண்டிருந்த காரைக்கால் மீனவர்களின் விசைப்படகை சுற்றி வளைத்த இலங்கை கடற்படையினர் விசைப்படகையும், மீனவர்கள் 12 பேரையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி கைது செய்துள்ளனர். மீனவர்கள் கைது, அவர்களின் விசைப் படகு, மீன்பிடிவலை மற்றும் பல லட்சம் பெருமானமுள்ள மீன்களை பறிமுதல் செய்து, காரைக்கால் மீனவர்களை சிறையில் அடைத்திருக்கும் செயல் மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். இலங்கை கடற்படையின் தொடர் அத்துமீறலை ஒன்றிய அரசு வேடிக்கை பார்ப்பது வேதனையாக உள்ளது.


இச்சம்பவம் ஒட்டு மொத்த காரைக்கால் மீனவர்களையும் துயரத்தில் ஆழ்த்தி உள்ளது. இவ்விவகாரத்தில் புதுச்சேரி அரசும், ஒன்றிய அரசும் காலதாமதப்படுத்தாமல் 11-ஆம் தேதி கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 12 பேரையும், அவர்கள் பறிமுதல் செய்த விசைப்படகையும் உடனடியாக விடுவிக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு ஒன்றிய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

---

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர்

# செஞ்சி மஸ்தான் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தீவிரப் பிரச்சாரம்!

### 'தொகுதி மக்களின் வளர்ச்சிக்குப் பாடுபடுவேன்' என உறுதி!



செஞ்சி, ஏப்.14–

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் செஞ்சி மத்திய ஒன்றியம் பாடி பள்ளம் ஊராட்சி கீழ் பாடி பள்ளம், மேல்பாடி பள்ளம், ரோமாபுரி, தாண்டவ சமுத்திரம், கல்லேரி, கொணலூர், புதுப்பேட்டை ஆகிய கிராமத்தில் செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முதலமைச்சரின் சாதனை திட்டங்களையும் முதலமைச்சரின் தேர்தல் அறிக்கையினை கூறி வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வாக்கு சேகரிக்க சென்ற திமுக வேட்பாளர்செஞ்சி மஸ்தான் எம்எல்ஏவிற்கு பெண்கள் ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது வாக்காளர்களிடம் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வாக்குசேகரித்து பேசுகையில்:

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது 40 ஆண்டு கால கனவான அரசு கலை கல்லூரி, மகப்பேறு அரசு மருத்துவமனை கட்டிடம்,உயர் மேம் பால கட்டிடங்கள் அங்கன்வாடி மைய கட்டிடங்கள் ரேஷன் கடைகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் என் தாய் தந்தை சொல்லை தட்டாமல் நிறைவாக வாழ்கிறேன். என்னுடைய மகள்களுக்கும் மகனுக்கும் திருமணம் செய்து கொடுத்து விட்டேன் பேரன் பேத்தியுடன்நிறைவாக வாழ்ந்து வருகிறேன் தற்போது அம்மா சொன்னதை அப்படியே திரும்ப செய்ய வேண்டும் என எண்ணியுள்ளேன் அன்றைக்கு பிள்ளைகளின் வளர்ச்சிக்கு தேவைப்பட்டதால் ஒரு ரூபாயில் முக்கால் ரூபாய் குடும்பத்திற்கு எடுத்துக் கொண்டு நாலனா செலவு செய்தேன்.

தற்போது கடவுள் மற்றும்தாயின் ஆசியுடன் அது நிறைவேறியுள்ளது அந்த வகையில் வாக்கு கேட்கின்ற இந்த மண்ணில் இருந்து பூமியிலிருந்து சொல்கிறேன். இந்தத் தேர்தலுக்குப் பிறகு ஜூன் 3ஆம் தேதி கலைஞர் பிறந்த நாளான அன்று அவரது நினைவிடத்திற்கு சென்று உறுதிமொழி எடுத்துக் கொள்வேன் தாயின் நினைவிடத்தில் சென்று உறுதிமொழி எடுத்துக் கொள்வேன் நீங்கள் சொன்னது ஒரு பங்கு உன் மகன் செஞ்சி மஸ்தான் ஆகிய நான் செய்யப் போவது 3 பங்கு என உறுதிமொழி எடுத்துக் கொள்வேன்.

அந்த வகையில் தனதுவருவாயில் 4ல் 3 பங்கு தொகுதியில் உள்ள மக்களின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பேன்உறுதிமொழி ஏற்றுக்கொண்டு ஏழை எளிய மக்களுக்காக கொடுத்து வாழ்ந்து கடைசி மூச்சு வரைதாயின் சொல்லை தட்டாமல் செய்யக்கூடிய ஒரு மகனாக இருப்பேன்.

உங்களில் ஒருவனாக உங்கள் இல்லத்தில் இருக்கும் பிள்ளையாக இருப்பேன் ஏழை எளிய பிள்ளைகளை படிக்க வைப்பதற்கும் மாற்றுத்திறனாளிகள், விதைகள், விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் மருத்துவ வசதிகள் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு தொகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் பல்வேறு நலத்திட்டங்களை செய்பவனாக நான் பணியாற்றுவேன் என தெரிவித்த திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தமிழ்நாடு முதலமைச்சர் தற்போது திமுக தேர்தல் அறிக்கையில் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அறிவித்துள்ளார். முதலமைச்சரின் காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும். மகளிர் உரிமைத்தொகை ரூ2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் .நான் முதல்வன் தமிழ் புதல்வன் திட்டத்தில் பயன் அடையும் கல்வி மாணவர்களுக்கு மாதம் ரூ1500. விவசாயிகளின் நலன் கருதி நெல் குவின்ட்டாலுக்கு ரூ3500 கரும்புட்டான் ஒன்றுக்கு ரூ 4500.மேலும் முதலமைச்சர் அறிவித்துள்ள சிறப்பு வாய்ந்தஇத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவதற்கு

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான 2.0 ஆட்சி மீண்டும் தொடர்வதற்கும் வாக்காளர்கள் ஆகிய நீங்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில்ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலைஊராட்சி மன்ற தலைவர்கள் தாட்சாயனிகார்த்திகேயன், சுபா குமார், காங்கரஸ் தலைவர்கள்சக்திவேல், சூரியமூர்த்தி, தேமுதிக மாவட்ட பொருளாளர் தயாநிதி, அருள்முருகன், விசிக மாவட்ட செயலாளர் சிவா, நன்மாறன், திமுக ஒன்றிய நிர்வாகிகள் வாசு, ஆறுமுகம், உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (10வது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| சாத்தூர் | – இராசா அருண்மொழி |
| பென்னாகரம் தொகுதி ஏரியூர் ஒன்றியம் | – பி. தர்மசெல்வன் |
| பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் நகரம் & ஒன்றியம் | – பி.என்.பி.இன்பசேகரன் |
| வில்லிவாக்கம் | – வழக்கறிஞர் அருண் |

**குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 12.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



தி.மு. கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற, சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட தண்டலை, வாணியந்தல் கிராமத்தில் திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு கால சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார், இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

---

## குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி ஆலபாக்கம் – பூவணிக்குப்பத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர்,

# முனைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் சிறப்புரை!

### மாவட்டச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர், எழுச்சி தமிழர் முனைவர் தொல். திருமாவளவன் எம்.பி. நாளை (**15.04.2026 புதன்கிழமை**) **மாலை 04.00** மணியளவில் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி **ஆலபாக்கம் - பூவாணிக்குப்பத்தில் (கடலூர் சிதம்பரம் சாலை) உள்ள விக்னேஷ்வரா பாலிடெக்னிக் கல்லூரி அருகே**, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை, ஆதரித்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சார பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்ற உள்ளார்.

அதுசமயம் இப்பிரச்சார பொதுக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
**செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.**

---

# திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்கு சேகரிப்பு !

திருச்சி, ஏப்.14-

திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பரப்புரை சூடு பிடித்துள்ள நிலையில், தி.மு.க. வேட்பாளரும் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (ஏப்ரல் 12) மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலைப் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பரப்புரை நடைபெற்ற இடங்கள்:

பொன்மலைப் பகுதிக்குட்பட்ட வார்டு எண்கள் 45 மற்றும் 45A வில் அமைந்திருக்கும்:

கல்கண்டார் கோட்டை
பொன்னேரிபுரம்
மூகாம்பிகை நகர்
திருநகர்
பெரியார் நகர்
பொன்மலைப்பட்டி
மொராய் சிட்டி எக்ஸ்டென்ஷன்

ஆகிய பகுதிகளில் திறந்த நிலையில் உள்ள ஜீப்பில் சென்றபடி அமைச்சர் வீதி வீதியாக வாக்கு சேகரித்தார்.

உரையின் சிறப்பம்சங்கள்:

பரப்புரையின் போது பொதுமக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் அன்பில் மகேஸ், கடந்த ஐந்து ஆண்டுகளில் கழக அரசு செயல்படுத்திய சாதனைத் திட்டங்களையும், குறிப்பாக அந்தந்த வார்டுகளில் நிறைவேற்றப்பட்ட உட்கட்டமைப்புப் பணிகளையும் விரிவாக எடுத்துக் கூறினார். தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் தொடர மீண்டும் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

பங்கேற்ற நிர்வாகிகள்:

இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதிக் கழகச் செயலாளர் தர்மராஜ், வட்டக் கழகச் செயலாளர்கள் தமிழ் மணி, முருகானந்தம், மாமன்ற உறுப்பினர் சித்தாலட்சுமி முருகானந்தம் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் வேலூர் மாநகராட்சி உட்பட்ட தொரப்பாடி பகுதி அரியூர் மலை கோடி பகுதியில் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனை எடுத்துச் கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் ஆர்.கே.ஐயப்பன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வெங்கடேசன் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.எம். சுந்தரராஜன்

### ஏப்ரல் 14 (2010)



கழகம் துவங்கிய நாளிலேயே உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். முதன்முதலாக 'அறிஞர் அண்ணா மன்றத்தை' தோற்றுவித்து, கழக பாசறைக் கூட்டங்களை நடத்தியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**